**எயிட்ஸ் கூறின் 09 ஆம் சுற்றுக்கான எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - 2014**

எயிட்ஸ் கூறின் 09 ஆம் சுற்றுக்கான எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎப்ஏரீஎம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய எஸ்ஆர்எல்-எஸ்-11-ஜீ13-எச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்**

மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் எச்ஐவீ/எயிட்ஸ் இனை ஒழித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சையளித்தலிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி 6 ஆவது மற்றும் 9 ஆவது சுற்றுக்கான எச்ஐவீ/எயிட்ஸ் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் முறையே ஐ.அ.டொ. 1,300,923 மற்றும் ஐ.அ.டொ. 4,956,930 ஆனதுடன் முழுத் தொகையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 06 ஆவது சுற்று 2010 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. 09 ஆவது சுற்று 2015 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளில் உள்ளடங்கியிருந்த தகவல்களுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

நிதிப்பிரமாணம் 756 இனால் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக ரூபா 63,694,541 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | ஆண்டின்போது கிடைத்த நிதிகள் | | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2014 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஜீஎவ்ஏரீஎம் | 4.96 | 629.46 | 0.68 | 89.18 | 0.66 | 86.22 | 2.64 | 334.15 |
| ஜீஓஎஸ்எல் | | | | 5.00 | | | | |
| | 4.96 | 629.46 | 0.68 | 94.18 | 0.66 | 86.22 | 2.64 | 334.15 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் விபரமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் உலகலாவிய நிதியத்தினால் 2011 முதல் 2014 வரையான காலத்தில் ஐ.அ.டொ. 3.98 மில்லியன் தொகையை விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதில் ஐ.அ.டொ. 2.84 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொ. 2.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சியுள்ள ரூபா 21.09 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 199,780 தொகை திறைசேரியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மானியத்தில் ரூபா 334 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 2.64 மில்லியன் தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 53 சதவீத தொகை மாத்திரம் செயற்திட்டக் காலத்தில் 80 சதவீதம் முடிவுற்ற பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே மானியத்தில் எஞ்சியுள்ள ரூபா 295.31 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 2.31 மில்லியன் தொகையினை மீதமாகவுள்ள 12 மாத காலத்தில் பயன்படுத்த முடியுமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எச்ஐவீ நோயாளிகளின் மீது கவனம் செலுத்துதல், நோயினைத் தடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் தேவையான மருத்துவ சிகிச்சைகளையும் ஏனைய வசதிகளையும் வழங்குதலே எயிட்ஸ் கூறின் பிரதான குறிக்கோளாக காணப்பட்ட போதிலும், 06 நோய் எதிர்ப்புச் சிகிச்சை நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தன.

(ஆ) எச்ஐவீ மீதான வருடாந்த மாநாடு 2014 ஒக்தோபர் 16 முதல் 18 வரை கொழும்பில் இடம்பெற்றிருந்ததுடன் ரூபா 999,934 இற்குச் சமனான ஐ.அ.டொ. 7,873 தொகை அதற்காக செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்தது. மாநாட்டிற்காக 240 விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 128 நபர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர்.

## 3.3 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டமையால் செயற்திட்டத்தின் பாதீட்டு மதிப்பீடுகள் பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டிற்கான 26 செயற்பாடுகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 52,931,441 கூட்டுத்தொகையான முழுமையான ஒதுக்கீடுகளும் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடர்புடைய அதிகாரத்தரப்பினரிடமிருந்து பொருத்தமான அங்கீகாரமின்றி 26 செயற்பாடுகளின் கீழ் பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 4,857,284 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) அத்துடன், பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடுகளின்றி 13 செயற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 5,234,830 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், அதற்குரிய பொருத்தமான அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டில் 15 செயற்பாடுகளிற்காக ரூபா 26,600,785 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 வரை ரூபா 6,419,977 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.